# சட்டத்தரணி ஒருவரை நீங்கள் பயன்படுத்துவதற்கான வழிகாட்டி

The Law Society

நம்மில் பெரும்பான்மையானோருக்கும் தொழில்முறை சட்ட உதவி என்பது ஏதாவது ஒரு கட்டத்தில் தேவைப்படும். வீடு வாங்குதல், விவாகரத்து பெறுதல், உயில் எழுதிவைத்தல் போன்றவற்றை பொதுவான தேவைகளுக்கான சில உதாரணங்களாகச் சொல்லலாம். வாழ்க்கைத் துணையுடன் சேர்ந்து ஒரே வீட்டில் வாழ்தல், தொழில் தொடங்குதல் அல்லது வயோதிகர் ஒருவரின் பொருளாதார விஷயங்களை ஒழுங்குசெய்தல் போன்றவற்றிலும் சட்டத்தரணியின் உதவி தேவைப்படலாம்.

சட்ட விஷயங்கள் எளிமையானவை அல்ல. ஆதலால் சிறந்த ஆலோசனையை நீங்கள் பெறுவதென்பது முக்கியம். சட்டம், அது உங்கள் மீது எவ்வகையில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதில் நிபுணர்கள் சட்டத்தரணிகள்தான். ஆகவே நீங்கள் நம்பத்தகுந்த சட்ட ஆலோசனையைப் பெற ஒரு சட்டத்தரணியைத் தொடர்புகொள்ளவும்.

## சட்டத்தரணி ஒருவரைக் கண்டறிதல்

எங்களது தொலைபேசி சேவையையோ இணையதளத்தையோ பயன்படுத்தி உங்கள் வட்டாரத்தில் உள்ள ஒரு சட்டத்தரணியைக் கண்டறிவது சுலபம். 0870 606 2555 என்ற இலக்கத்தை அழைத்தோ www.lawsociety.org.uk/findasolicitor என்ற இணையதளத்துக்கு சென்றோ சட்டத்தரணியைத் தேட ஆரம்பியுங்கள், ஆனால் எவ்வகையான சேவை உங்களுக்குத் தேவைப்படுகிறது என்பதை கவனத்தில் கொண்டு செயல்படுங்கள். நீங்கள் கருத்தில் கொள்ளவேண்டிய சில விடயங்கள் பின்வருமாறு:

**எனக்கு எவ்வகையான சட்ட உதவி தேவை?**

பல்வேறு சட்டப் பிரிவுகளில் சட்டத்தரணிகள் அலுவலகம் ஒன்று சேவைகளை வழங்கலாம். ஆனால் ஒரு சட்டத்தரணி அல்லது ஒரு சட்டத்தரணி அலுவலகம் சட்டத்தின் ஒன்றிரண்டு பிரிவுகளில் மட்டும் கவனம் செலுத்துவது என்ற பாங்கும் அதிகரித்துவருகிறது. வழமையாக நீங்கள் பயன்படுத்தும் சட்டத்தரணிகள் அலுவலகத்தினால் உங்களுடைய எல்லாவிதமான சட்டத் தேவைகளிலும் உதவமுடியவில்லை என்றால், வேறு ஒரு சட்டத்தரணியிடம் அவர்களே உங்களை அனுப்பிவைப்பார்கள். மாறாக, நீங்கள் விருப்பப்பட்டால், உங்கள் சார்பாக அவர்களே ஒரு நிபுணரின் ஆலோசனையை உங்கள் சார்பில் கேட்டுச்சொல்லலாம்.

**எனக்கு உதவி வழங்கும் திறன் அவர்களுக்கு உண்டு என்பதை நான் எதைக்கொண்டு நம்புவது?**

சட்டத்தரணிகள் அனைவரும் கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறைகளை இயற்றும் சட்டத்தரணிகள் ஒழுங்கு அலுவலகம் என்ற (சட்ட சங்கத்தால் நிறுவப்பட்ட) சுயாதீன ஒழுங்கு அமைப்பு கொடுக்கின்ற சான்றிதழ் இருந்தால்தான் சட்டத்தரணிகளால் தொழில்செய்ய முடியும். தொழில் செய்யும் தகுதி அவர்களுக்கு இருக்கிறது என்பதற்கு இதுவே உத்திரவாதம். ஏதாவது பிரச்சினை வந்தால் உங்களது நஷ்டங்களை ஈடுகட்ட காப்பீடும் அவர்கள் எடுத்துவைத்திருக்க வேண்டும். வேண்டுமானால், சான்றிதழைக் கேட்டு வாங்கி பாருங்கள் (பொதுவாக இந்தச் சான்றிதழ் சட்டத்தரணி அலுவலகத்தில் கண்ணில்படுவதுபோல வைக்கப்பட்டிருக்கும்). மாறாக சட்டத்தரணிகள் ஒழுங்கு அலுவலகத்தையும் 0870 606 2555 என்ற இலக்கத்தில் அழைத்து தெரிந்துகொள்ளலாம்.)

நல்ல வகையில் சேவை வழங்கியதற்கான விருது எதனையும் அந்த அலுவலகம் வாங்கியுள்ளதா என்றும் நீங்கள் சட்டத்தரணியிடம் கேட்டு அறியலாம். எமது 'லெக்ஸெல்' தொழில் தர விருதை அவ்வலுவலகம் வாங்கியிருந்தால், விருது கொடுக்கப்பட்ட விபரத்தை நாங்கள் உங்களிடம் உறுதிசெய்ய முடியும். (விபரமறிய lexcel@lawsociety.org.uk என்ற மின் அஞ்சல் முகவரியை அல்லது 020 7320 5933 என்ற தொலைபேசி இலக்கத்தைத் தொடர்புகொள்ளவும்.)

சட்டத்தரணிகள் ஒழுங்கு அலுவலகம் நடத்தும் 'தர உத்திரவாதச் சான்று திட்டங்களில்' தனித்தனி சட்டத்தரணிகள் உறுப்பினர்களாய் இருப்பார்கள். பல்வேறு சட்டப் பிரிவுகளில் இப்படியான திட்டங்கள் உண்டு. இவற்றில் ஒரு திட்டத்தில் சேர, அப்பிரிவில் கணிசமான நுண்ணறிவும், நிபுணத்துவமும் இருப்பதை சட்டத்தரணிகள் நிரூபிக்க வேண்டும். எமது இந்தத் திட்டங்களில் உறுப்பினராய் இருக்கும் சட்டத்தரணிகள் உங்கள் வட்டாரத்தில் யார்யார் என்பதை கண்டறிய www.lawsociety.org.uk என்ற எமது இணையதளம் சென்று சட்டத்தரணியைக் கண்டறிதல் என்ற பாகத்தில் பார்க்கவும். குறிப்பிட்ட துறையில் தரச் சான்றுகள் பெற்றவர்கள் பற்றிய மேலதிக விபரங்கள் இதில் உண்டு.

**சட்டத்தரணி அலுவலகம் எங்கு அமைந்துள்ளது?**

சட்டத்தரணியின் அலுவலகம் இருக்கிற இடம் உங்களுக்கு வசதியானதாக இருக்கவேண்டும். குறிப்பாக, வயது கூடியவர்கள், நோயாளிகள் மற்றும் உடல் ஊனமுற்றவர்களுக்கு அலுவலகம் அருகிலேயே இருத்தல் நல்லது. உங்கள் வீட்டின் அருகிலேயே இருக்கும் ஒரு சட்டத்தரணியைத் தேடுகிறீர்கள் என்றால் குறைந்த எண்ணிக்கையில் இருந்து நீங்கள் ஒருவரைத் தெரிவுசெய்ய நேரிடும் என்பதைப் புரிந்துகொள்ளுங்கள். உங்களுக்கு பயணம் செய்வது சிரமம் என்றால், சில சட்டத்தரணிகள் உங்களது வீட்டுக்கு வரவும் தயாராக இருப்பார்கள், அது பற்றிக் கேட்டுத் தெரிந்துகொள்வது நல்லது.

**இலவச சட்ட உதவி பணிகளை அவர்கள் ஏற்பார்களா?**

உங்களுக்கு குறைவான வருமானம் என்றாலோ அல்லது அரசின் உதவித்தொகையை நீங்கள் பெற்றுவருகிறீர்கள் என்றாலோ, இலவச சட்ட உதவி உங்களுக்குக் கிடைக்கலாம். உங்களுக்கு அருகில் உள்ள குடிமக்கள் ஆலோசனை மையம் அல்லது சட்ட மையத்தை தொடர்புகொண்டு அதுபற்றி நீங்கள் கேட்டறியலாம். சில சட்டத்தரணிகள் இலவச சட்ட உதவி பணிகளை எடுத்துக்கொள்வார்கள் சிலர் மாட்டார்கள். அரசு உதவித் தொகை மூலம் வழக்கு செலவுகளுக்கு பணம் கொடுக்கக்கூடியவர் நீங்கள் என்றால், அந்த வகையிலான வழக்குகளை எடுத்துக்கொள்ளும் சட்டத்தரணிகள் யார் என்ற வகையில் தேடிப்பார்க்க வேண்டும். சமூக சட்ட சேவையின் இணையதளமான www.clsdirect.org.uk என்ற முகவரிக்குச் சென்று இலவச சட்ட உதவி வழக்குகளைக் கையாளும் சட்டத்தரணிகளைக் கண்டறியலாம்.

சட்ட சேவைகள் ஆணையம் இலவச சட்ட உதவி விவகாரங்களை நிர்வகிக்கிறது. இலவச சட்ட உதவிகள் வழங்கும் சட்டத்தரணி அலுவலகங்கள் உயர் தரத்தில் சேவைகளை வழங்குவதை உறுதிசெய்வது இந்த ஆணையத்தின் பணி.

**நிபந்தனைகள் அடிப்படையில் பணம் பெற சம்மதிப்பார்களா?**

விபத்துக்கு நஷ்ட ஈடு பெறுதல் போன்ற சில வகை வழக்குகளில் நிபந்தனை அடிப்படையில் பணம் வாங்க உங்கள் சட்டத்தரணி தயாராக இருக்கலாம். 'வெற்றி இல்லை கட்டணம் இல்லை' ஏற்பாடு என்று இதைச் பொதுவாக சொல்வார்கள். அதாவது, வழக்கில் நீங்கள் வெற்றி பெறுகிறீர்கள் என்றால், தோற்ற தரப்பினர் உங்கள் சட்டத்தரணிக்கான கட்டணத்தை செலுத்துவார்கள். நீங்கள் தோற்றால், சட்டத்தரணிக்கு நீங்கள் பணம் கொடுக்கத் தேவையில்லை. தோற்றால், மற்ற தரப்பின் சட்டத்தரணிக்கு பணம்கொடுக்க முன்னரே நீங்கள் காப்பீடு செய்துகொள்ள வேண்டும். நிபந்தனை அடிப்படையில் கட்டணம் என்ற ஏற்பாட்டில் பல்வேறு வகைகள் இருக்கின்றன. ஆனால் இந்த அடிப்படையில் வழக்குகளை எடுக்க அனைத்து சட்டத்தரணி அலுவலகங்களும் முன்வருவதில்லை.

**ஆறுதலாக நடந்துகொள்வார்களா?**

உறவு முறிவது போன்ற வாழ்க்கைப் பிரச்சினை தொடர்பாக சட்டத்தரணியை சந்திக்க வேண்டிய நிலை வரும்போது உங்களுக்கு ஆறுதலாக இருக்கின்ற ஒருவரைத் தேர்ந்தெடுக்க நீங்கள் விரும்புவீர்கள். நீங்கள் மன உளைச்சலில் இருக்கும்போது பெரும்பாலான சட்டத்தரணிகள் அதனை புரிந்துகொண்டு ஆறுதலாக நடந்துகொள்வார்கள். ஆண் ஒரு ஆண் சட்டத்தரணியையும் பெண் ஒரு பெண் சட்டத்தரணியையும் விரும்பலாம். அப்படித்தான் உங்களுக்கு வேண்டுமென்றால் அதை சொல்லத் தயங்க வேண்டாம்.

**சட்டத்தரணிகள் என்னுடைய மொழி பேசுவார்களா?**

ஆங்கிலம் உங்களது முதல் மொழி அல்ல என்றால், சட்டத்தரணியைத் தேடும்போதே அதைத் குறிப்பிடவேண்டும். போதிய அளவு முன்னதாகவே சொல்லிவைத்தால், உங்களைச் சந்திக்கும்போது மொழிபெயர்ப்பாளர் ஒருவர் உதவுவதற்கு சட்டத்தரணி அலுவலகம் ஏற்பாடு செய்யும்.

## சந்திக்க நேரம் வாங்குதல்

பொருத்தமான சட்டத்தரணி அலுவலகம் ஒன்றை நீங்கள் கண்டறிந்ததன் பின்னர், அவர்களை நீங்கள் சந்திக்க நேரம் வாங்கவேண்டும். சந்திப்பின்போது யாரையாவது நீங்கள் கூட்டிப்போக வேண்டுமென்றால் அதை அவர்களிடம் தெரியப்படுத்தவும். அடையாள அட்டை, வருமான ரசீது போன்ற ஆவணங்கள் எதனையும் கொண்டுவர வேண்டுமா என்று கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டும்.

## தயார் செய்துகொள்ளுங்கள்

சட்டத்தரணியுடனான சந்திப்புக்கு முன்னர் வழக்கு விபரங்கள் சம்பந்தமாக எந்த அளவுக்கு உங்களை நீங்கள் தயார் செய்துகொள்கிறீர்களோ அந்த அளவுக்கு பலன் உண்டு. நீங்கள் தெரிவிக்க வேண்டிய முக்கிய விபரங்கள், கேட்கவேண்டிய கேள்விகளைப் பட்டியலிட்டுக் கொள்ளுங்கள். சம்பந்தப்பட்ட ஆவணங்களை நீங்கள் எளிதில் எடுக்கக்கூடிய வரிசைப் பிரகாரம் அடுக்கி வைத்துக்கொள்ளுங்கள். அவ்வாறு நீங்கள் செய்தால் உங்களது சூழ்நிலையை சட்டத்தரணி எளிதாகவும் விரைவாகவும் புரிந்துகொண்டு முறையான

# சட்டத்தரணி ஒருவரை நீங்கள் பயன்படுத்துவதற்கான வழிகாட்டி

The Law Society

## சந்திப்பின்போது

எவ்வளவு நேர சந்திப்பு என்று தெரிந்துவைத்துக் கொள்ளுங்கள். அப்போதுதான், சொல்ல வேண்டியதை சொல்லி முடிக்கும் முன்னரே நேரம் முடிந்துவிட்டது என்று நீங்கள் நினைக்கும் நிலையைத் தவிர்க்கலாம். நீங்கள் எடுத்துவந்த குறிப்புகளைப் முன்னால் வைத்துக்கொண்டு, ஒவ்வொரு விஷயம் பேசி முடிக்கவுட்டவுடன் அதைக் குறியிட்டுக் கொள்ளுங்கள். உங்களுக்கு ஏதும் புரியவில்லை என்றால் அதுபற்றி விளக்கம் கேட்கத் தயங்கவேண்டாம்.

இறுதியாக, அந்தச் சந்திப்பின்போது சட்டத்தரணி உங்களுக்கு வழங்கிய ஆலோசனையின் சாராம்சத்தை ஒரு கடிதமாக எழுதி அனுப்பச்சொல்லுங்கள். அந்தக் கடிதம் பின்வரும் விபரங்களை உறுதிசெய்ய வேண்டும்.

- உங்கள் வழக்கை முன்னெடுக்க அந்த சட்டத்தரணிக்கு விருப்பம் உள்ளதா என்பது;
- உங்களோடு அதிகம் தொடர்பில் இருக்கக்கூடிய சட்டத்தரணி அல்லது அலுவலக ஊழியரின் பெயர்;
- வழக்கை முடித்துத்தர அவர்களுக்கு எவ்வளவு அவகாசம் எடுக்கும் என்ற மதிப்பீடு;
- ஆகக்கூடிய செலவுகள் பற்றிய மதிப்பீடு மற்றும் ஒத்துக்கொள்ளப்பட்ட செலவு வரம்பு என்று இருந்தால் அது;
- நீங்கள் வழங்க வேண்டிய மற்ற விபரங்கள் பற்றிய குறிப்பு.

## சட்டத்தரணியின் கட்டணங்கள்

சட்ட ஆலோசனை என்பதை மற்ற விஷயங்களைப்போல நீங்கள் பணம் செலவழித்துதான் பெற வேண்டும். ஆனால் அதன் மதிப்பு மிகப் பெரியதாக அமையலாம். சட்டத்தரணிகள் இடையில் கட்டணம் மாறுபடும். தவிர சட்டத்தரணியின் நிபுணத்துவம் மற்றும் அனுபவத்தைப் பொறுத்தும், வழக்கு எவ்வளவு சிக்கலானது என்பதைப் பொறுத்தும் கட்டணம் அமையும்.

எந்த சட்டத்தரணி அலுவலகத்தைப் பயன்படுத்துவது என்று முடிவுசெய்வதற்கு முன், ஆங்காங்கே விசாரித்து தெரிந்துகொள்ள நீங்கள் விரும்பலாம். எவ்வகையான சட்டத்தரணியிடம் நீங்கள் பேசவேண்டும் என்பதைத் தீர்மானித்துக்கொண்டு, பின்னர் உங்கள் வட்டாரத்தின் சில சட்டத்தரணிகளிடம் அவர்கள் எவ்வளவு கட்டணம் பெறுகிறார்கள் என்று தெரிந்துகொள்ளவும். பல சட்டத்தரணிகள் சிறிது நேர முதல் சந்திப்புக்கு சிறு கட்டணம் மட்டுமே வாங்குகிறார்கள் சிலர் கட்டணம் வாங்குவதில்லை. ஆதலால் கேட்டுத் தெரிந்துகொள்வது நல்லது.

ஆனால் கட்டணத்தின் அளவை மட்டும் வைத்து ஆளை முடிவுசெய்யாதீர்கள். நீங்கள் எளிதில் அணுகக்கூடிய, நீங்கள் புரிந்துகொள்ளும்படியான ஆலோசனைகளை வழங்கக்கூடியவர்களை கண்டறிய முயலுவது என்பது முக்கியம்.

**முன் நிர்ணய கட்டணமா அல்லது நேரக் கணக்கு அடிப்படையிலான கட்டணமா?**

குறிப்பிட்ட வேலைக்கு குறிப்பிட்ட தொகை மட்டும்தான் என்று எல்லா நேரத்திலும் சட்டத்தரணி பணம் வாங்குவதில்லை. வேலை பார்க்கும் நேரத்தின் அடிப்படையில் கட்டணம் வசூலிக்கப்படும் தருணங்கள் அதிகம். ஆக அதிக நேரம் எடுத்தால், அதிக செலவாகும். ஆனால் பொதுவாக முதல் சந்திப்பின்போதே, ஆகக்கூடிய செலவின் மதிப்பீடு ஒன்றை சட்டத்தரணி உங்களுக்கு வழங்கவேண்டும்.

## தொடர்பில் இருத்தல்

சட்டத்தரணி ஒருவரை நீங்கள் நியமித்த பின்னர், வழக்கின் ஒவ்வொரு முக்கியக் கட்டத்திலும் அவர் உங்களைத் தொடர்புகொண்டு எவ்வகையில் வழக்கை முன்னெடுக்க நீங்கள் விரும்புகிறீர்கள் என்று அவர் தெரிந்துகொள்ள வேண்டும். அதேபோல, வழக்கின் போக்கை மாற்றக்கூடிய வகையில் உங்கள் சூழலில் ஏற்படும் மாற்றங்களை அவ்வப்போது சட்டத்தரணியிடம் நீங்கள் தெரிவித்து வரவேண்டும். இலவச சட்ட உதவி பெறுவது தொடர்பான உங்கள் தகுதியை மாற்றக்கூடிய வகையிலான பொருளாதார மாற்றங்களும் இதில் அடங்கும்.

## கூடுதல் தகவல்

சட்டத்தரணிகள் வழங்கக்கூடிய பொதுவான சேவைகள் பற்றிய பிரசுர வரிசையில் ஒன்று இது. இந்த வரிசையிலுள்ள மற்ற பிரசுரங்களின் பட்டியல் கீழே தரப்படுகிறது. உங்களது சட்டத்தரணியிடம் இருந்தும் அல்லது இங்கிலாந்து மற்றும் வேல்ஸ்சுக்கான சட்ட சங்கத்தை 0870 3333 084 என்ற இலக்கத்தில் அழைத்தும் நீங்கள் இவற்றைப் பெறலாம்.

- உயில் எழுதுவதற்கான வழிகாட்டி
- வீடு வாங்குவதற்கான உங்கள் வழிகாட்டி
- விவாகரத்து பெறுவதற்கான வழிகாட்டி
- 'ப்ரொபேட்' எனப்படும் உயிலுக்கான நீதிமன்ற அங்கீகாரம் பெறுவதற்கான உங்கள் வழிகாட்டி
- தொழில் தொடங்குதற்கான உங்கள் வழிகாட்டி
- வாழ்க்கைத் துணையுடன் சேர்ந்து குடும்பம் நடத்துவதற்கு தேவையான உதவிகள் பற்றிய வழிகாட்டி
- வயோதிகர்களின் நிதி விவகாரங்கள் குறித்த உங்கள் வழிகாட்டி
- வீடு வாடகைக்கு எடுப்பதற்கான உங்கள் வழிகாட்டி
- வேலையிடப் பிரச்சினைகள் குறித்த உங்கள் வழிகாட்டி
- வீடு வாடகைக்கு விடுவதற்கான உங்கள் வழிகாட்டி
- அடிபட்டதற்கு நஷ்டஈடு வாங்குவதற்கான உங்கள் வழிகாட்டி
- தஞ்சம் கோருவதற்கான உங்கள் வழிகாட்டி

**பெரிய எழுத்துக்களைக் கொண்டு அச்சடிக்கப்பட்ட வடிவிலும், பார்வையற்றோர் படித்து அறியக்கூடிய பிரெய்லி எழுத்து வடிவிலும், குறுந்தகடு வடிவிலும் இந்த வழிகாட்டி கிடைக்கும். இதில் ஒன்று உங்களுக்கு வேண்டுமென்றால் accessibility@lawsociety.org.uk என்ற மின் -அஞ்சல் முகவரியையோ அல்லது 0870 606 2555 என்ற தொலைபேசி இலக்கத்தையோ தொடர்புகொள்ளவும்.**

**வேறு பல மொழிகளிலும் இந்த வழிகாட்டி கிடைக்கும். www.lawsociety.org.uk என்ற எங்கள் இணைய தளத்திற்குச் சென்று நீங்கள் அவற்றைப் பெறலாம்.**

Lexcel

Look for Lexcel - the mark of excellence

The Law Society 113 Chancery Lane London WC2A 1PL தொலைபேசி: 020 7242 1222 www.lawsociety.org.uk

துல்லியமான விபரங்களை வழங்குவதற்கான அனைத்து முயற்சிகளையும் நாங்கள் எடுத்துள்ளோம் என்றாலும், சட்டம் என்பது தொடர்ந்தும் மாறிவருகிறது, ஒவ்வொருத்தருக்கும் அது வெவ்வேறு வகையில் பொருந்துகிறது என்பதை நீங்கள் கவனத்தில் கொள்ளவேண்டும். உங்கள் சூழ்நிலைக்கான குறிப்பிட்ட ஆலோசனைக்கு எதுவும் ஈடாகாது. ஆகவே இந்தப் பிரசுரத்தை மட்டும் நீங்கள் சார்ந்திருந்தால் அதற்கு நாங்கள் பொறுப்பல்ல.

Designed by dmlmarketing.co.uk Version 2, 2007 Your guide to using a solicitor - Tamil